# இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் நடைமுறை வேலை, மிகுதி இருப்புக்கள், மானியம் ஆகிய விடயங்களுக்கான கணக்கீட்டுக்கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக கற்கைநெறி வருமானங்களை கணக்குவைக்கும் போது அறவீடு நிச்சயமற்ற கற்கைநெறி வருமானங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட 1% அதாவது ரூபா 4,573,445 தொகையான ஏற்பாடு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 29 இன் பிரகாரம் செலவாகக் கணக்கு வைப்பதற்கு பதிலாக வருமானத்திலிருந்து கழித்து காட்டப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கை

அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபம் இலக்கம் 380 இனால் உள்ளடக்கப்படாது பல்கலைக்கழகத்தின் வருமானமாக கணக்குவைக்கப்படவேண்டிய ரூபா 37,379,907 தொகை ரூபா 20,881,727 மாத்திரம் குறுங்கால கற்கைநெறி வருமானமாகவும் ரூபா 16,498,180 தொகை விசேட நிதியாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய ரூபா 16,498,180 தொகையான வருமானம் வருமானமாகவும் அதற்குரிய செலவுகளையும் கணக்குவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஏனைய வருமான மூலங்களின் திரண்ட அளவு இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இன் பிரகாரம் இந்த வருமானங்களைக் கணக்கு வைத்தல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை இனங்காணப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 29 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டு கணக்குவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டிற்கான சொத்துக்களை மீள்மதிப்புச் செய்யும் போது இடம்பெற்றிருந்த குறைபாடுகள் தொடர்பான தெரிவுச் செவ்வையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,088,520,977 தொகையான நிலையான சொத்துக்களுக்குரிய குறைபாடுகள் மற்றும் தெரிவுச் செவ்வைக்குப் புறம்பான சொத்துக்களின் சரியான தன்மை தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்து அப்பெறுமதிகளைச் சரிசெய்து செம்மையாக்கல் செய்யப்பட்டமையினால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சொத்துக்கள் திரண்ட பெறுமானத் தேய்வு, மீள்மதிப்பு ஒதுக்கம் ஆகிய மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது. 2012 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உப அறிக்கையின் படி காணிகளின் பெறுமதி ரூபா 193,888,000 ஆல் குறைவடைய வேண்டியதாகவும் கட்டிடப்பெறுமதி ரூபா 53,905,317 ஆல் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) (i) தொலைக் கல்வியினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் உதவியாக 2004-2010 கால எல்லைக்குள் ரூபா 1,896.5 மில்லியன் பெறுமதியான வாகனம், தளபாடம், இயந்திரம் உபகரணம் என்பன கிடைத்திருந்த போதிலும் அலுவலகம் உபகரணங்களும் இயந்திரங்களும் மற்றும் பொறிகளின் பெறுமதி ரூபா 663.5 மில்லியனால் குறைத்தும் வாகனங்கள், தளபாடங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், என்பன ரூபா 144 மில்லியனால் அதிகரித்தும் கணக்குவைக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு ஆண்டிலும் கிடைத்த பொருட்களின் அளவுகளின் பிரகாரம் செம்மையாக்கும் போது ரூபா 374.4 மில்லியனால் திரண்ட பெறுமானத் தேய்வு கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

(ii) பல்கலைக்கழகத்தின் நாவலை தலைமை அலுவலக வளவு மற்றும் பிராந்திய கல்வி நிலையங்களில் உரிய காலஎல்லையினுள் ரூபா 971.9 மில்லியன் பெறுமதியான நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இது ரூபா 903.8 மில்லியனாக ரூபா 68.1 ஆல் குறைவாகவும்

அதற்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 12.4 மில்லியனால் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்ட ஆண்டினை சரியாக நிர்ணயிக்காமை மற்றும் தாமதக் கட்டணத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாமை என்பவற்றின் காரணமாக இடம்பெற்ற பிழையான கணக்கீட்டின் காரணமாக திரண்ட பெறுமானத் தேய்வின் அளவு ரூபா 26.9 மில்லியனால் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) மேலே (i), (ii) பந்திகளில் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு தவறுகளின் காரணமாக நடைமுறை ஆண்டிற்கான உதவிக் கணக்கின் மீதி ரூபா 587.6 மில்லியனாலும் அதற்குரிய காலக்கழிவின் அளவு ரூபா 359.9 மில்லியனாலும் குறைவடைந்திருந்தது.

### 1.2.4 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர் கல்வி அமைச்சிற்குச் சொந்தமான தொலைக் கல்வி கணனி அணுகுதல் நிலையங்களை (NODES Access Centers) திறந்த பல்கலைக்கழகத்தின் 20 பிராந்திய/ கல்வி நிலையங்கள் பேணப்பட்டு வருவதுடன் அந்த நிலையங்களுக்காக பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள கட்டிடங்கள், நீர், மின்சாரம், பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்படவேண்டிய ரூபா 21,139,200 தொகை கணக்குவைக்கப்படாததுடன் அப்பணத்தினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில்களை வழங்கும் போது மேற்கொள்ளப்பட்ட பிணை முறிகளை மீறிய 12 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,759,607 பெறுமதியான பிணை முறிகளை அறவீடு செய்வது தொடர்பாக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் அறவிடப்பட வேண்டிய பிணை முறிகளின் ரூபா 23,187,953 பெறுமதியான 13 உத்தியோகத்தர்கள் பிணைகளை மீறி 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை அவற்றிற்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இல்லாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட :- | | |
| | - தளபாடம் | 116,887,429 | சொத்துக்கள் சரியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கும் |
| | - அலுவலக உபகரணம் | 448,144,791 | பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டமைக்கும் |
| | - ஆய்வுகூட உபகரணம் | 672,836,393 | சொத்துக்களின் பெறுமதி சரியானவை என்பதற்கும் |
| | - இயந்திரங்களும் பொறிகளும் | 113,605,088 | உரிய இடங்களில் காணப்படுகின்றன என்பதற்குமான சான்று |
| (ஆ) | உதவியின் கீழ் பதவியணியினருக்கான பயிற்சி | 2,021,684 | கொடுப்பனவுச் சான்றுறுதி மற்றும் துணை ஆவணங்கள் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணங்கள் 139 மற்றும் 261 | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அதற்காக போதியளவு வங்கி மீதி காணப்படுகின்றதா என்பது உறுதிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 06 வங்கி நடைமுறைக் கணக்குகளின் மீதிகளை மிகைத்து ரூபா 1,502,206 கூட்டுமொத்தப் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 177 | பிராந்திய அலுவலகங்களின் மூலம் சேகரிக்கப்படுகின்ற பணம் நாளாந்தம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய |

போதிலும் பொலன்னறுவை, குருனாகல், கம்பஹா, கேகாலை ஆகிய கல்வி நிலையங்களில் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களின் விற்பனை வருமானத்தினை அனுப்பிவைத்தல் விண்ணப்பங்களை வழங்கும் இறுதித் திகதியும் கடந்து 23 நாட்கள் தாமதமடைந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இக்கல்வி நிலையங்களில் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான ஏடுகளில் பதிதல் மற்றும் கற்கை நெறிகளின் பிரகாரம் இலக்கங்களை ஒதுக்கீடு செய்தலும் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ)

(i) மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 31 வரை ரூபா 20,000 தொகையான குறித்த செயலுக்கான 130 உபகட்டு நிதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் கூட்டுத்தொகை ரூபா 7,097,276 ஆகும். இதில் 64 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 50,000 இலிருந்து ரூபா 300,000 வரையாகக் காணப்பட்டன.

(ii) அக்காலத்திற்குள் 16 சந்தர்ப்பங்களின்ன போது செலவு மதிப்பீடுகளின்றி வழங்கப்பட்டிருந்த ரூபா 466,895 தொகையான முற்பணங்களில் ரூபா 243,497 தொகை அதாவது 52% செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) குறித்த செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன்தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 972,945 கூட்டுமொத்த தொகையான 27 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களைத் தீர்த்துவைத்தல் 11 நாட்களிலிருந்து 55 நாட்கள் வரை தாமதடைந்திருந்தன.

(iv) நிதிப்பிரமாணம் 395

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் பிரகாரம் ரூபா 6,390,332 கூட்டுமொத்த மீதிகளான 04 நடைமுறைக் கணக்கு மீதிகளுக்குரிய வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2003 யூன் 22 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபம்

5.1 ஆம் பந்தி — 2011-2016 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் கடந்த 03 ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான மீளாய்வு மற்றும் பல்கலைக்கழகத்திடம் உள்ள வளங்கள் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

5.2.1 ஆம் பந்தி — பாதீட்டினைத் தயாரிக்கும் போது பாதீடு செய்யப்பட்ட வருமானம் செலவுகளின் விபரம், ஐந்தொகை, காசுப்பாய்ச்சல் கூற்று, செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கும் வகையில் பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவுகள் திட்டம் ஆகிய கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XXVI ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 757(இ)(2)

(i) 04 பிரிவுகளின் மடிக்கணனிகள், மூடப்பட்டிருந்த அறைகளிலுள்ள சொத்துக்கள், விரிவுரையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சொத்துக்கள் ஆகிய சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்படாது மெய்மையாய்வுச் சபை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 பிரிவுகளில் காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத 78 விடயங்களை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த 06 பிரிவுகளுக்குரிய 833 உருப்படிகளின் பொருள் பற்றாக்குறையும் 79 உருப்படிகளின் பொருள் மிகையும் தொடர்பாக நிதிப்பிரமாணம் 102 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறந்த பல்கலைக்கழகத்தில் பொதிகளை எடுத்துச் செல்வதற்காக வருடாந்த கேட்பு மனுக்கள் கோரப்படாது உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,018,773 மற்றும் ரூபா 965,756 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. இதன் போது உரிய பொதிகளின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விலாசமிடப்பட்ட BD/PEI/174/11 ஆம் இலக்க கடிதத்திற்கு இணக்கமற்ற வகையில் 2011 ஆம் ஆண்டின் போது இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் தேர்ச்சிப் படியாக ரூபா 1,172,902 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கேகாலை கல்வி நிலையத்திற்கு நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரை நியமித்ததன் பின்னரும் அப்பதவியில் இதற்கு முன்னர் சேவையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரும் அங்கீகாரமின்றி நாளாந்த சம்பளம் செலுத்தி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் எதுவித மேற்பார்வையுமின்றி அவரின் தற்றுணிபின் பேரில் தனிப்பட்ட முறையில் வருகைப் பதிவேடு பயன்படுத்தப்பட்டு நாளாந்த சம்பளம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கிணங்க 2011 யூன் மாதத்திலிருந்து திசெம்பர் வரை ரூபா 79,475 கூட்டுமொத்த தொகை அந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.8 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளுக்காக மாணவர்களால் பல்கலைக்கழகத்தின் சேகரிப்புக் கணக்கிற்கு பணம் செலவுவைக்கப்படுகின்றன. அவ்வாறு செலவுவைக்கப்பட்ட பணத்தை நாளாந்தம் இனங்கண்டு உரிய மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணமாக பதியப்படாமை காரணமாக 2009 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் காலத்துக்கு ரூபா 7,776,098 தொகையான இனங்காணப்படாத மீதி அவதானிக்கப்பட்டதுடன் இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்காண்பதற்காக முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பஹா கல்வி நிலையத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்காக பிராந்திய உத்தியோகத்தரால் நாளாந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 05 ஊழியர்களுக்காக ரூபா 91,350 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பணம் பெற்றுக்கொண்டமைக்கு பதிவு மேற்கொள்ளப்பட்ட தற்காலிக பதிவேட்டினைத் தவிர்த்து ஊழியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமைக்கான எதுவித சான்றுகளும் காணப்படவில்லை.

தற்பொழுது இவ்வாறான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக உபவேந்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) 2001 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்ட ஊடக உத்தியோகத்தர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஊடக உத்தியோகத்தரை நியமிப்பதற்காக நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் ஊடக உத்தியோகத்தர் பதவிக்காக உரிய தகமைகளைக் கொண்டிருக்காத மற்றும் அதன் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

(ஈ) பொலன்னறுவை மற்றும் கேகாலை கல்வி நிலையங்களில் சில்லறைக் காசு கட்டுப்பாடு, விண்ணப்பப்பத்திரங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த பணத்தினதும் பரீட்சை முற்பணங்களினதும் கட்டுப்பாடு, நிலையத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகச் செயற்படுதல் தொடர்பான பொறுப்பு, என்பன 06 மாத காலத்திற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்ட கல்வி உதவியாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையங்களுக்குரிய நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அவரின் தனிப்பட்ட வங்கி கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 22,670,608 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 130,145,436 ஆக இருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 152,816,644 முன்னேற்றம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான அரசாங்க வருமானம் ரூபா 103,386,000 ஆல் அதிகரித்ததன் மூலம் இடம்பெற்ற தாக்கத்தினைத் தவிர்த்து தொலைக்கல்வியினை நவீனமயப்படுத்துதல் செயற்திட்டத்தின் கீழ் 2004-2009 காலத்தினுள் நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,255,300,751

தொகையான நிலையான சொத்துக்களை 2011 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கும் போது ஆண்டிற்குரிய ரூபா 267,855,402 தொகையான காலக்கழிவு வருமானமாக இனங்காணல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. நிதிசார் மிளாய்வு

---

### 3.1 செயலாற்றல்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 256 நபர்களைக் கொண்ட பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சபையினால் 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆராய்ச்சித் தொகுப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்டட ஆராய்ச்சிக் கட்டுரைகளின் எண்ணிக்கை 95 ஆக குறைந்த எண்ணிக்கையுடன் காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டிற்கான இத் தொகை 59 ஆக இருந்தது.ஸ

(ஆ) பல்கலைக்கழகத்தின் கூட்டிணைந்த திட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் மாணவர்கள் பதிவுசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குத் தேவையான கற்கைநெறியில் பொருட்கள் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 03 கல்வி நிகழ்த்தித்திட்டங்களுக்குரிய 07 கற்கை நெறிக் கையேடுகள் மாணவர்களைப் பதிவுசெய்யும் சந்தர்ப்பத்தில் மத்திய கற்கை நெறிப் பொருட்களை வழங்கும் நிலையத்தில் இல்லாமையும் 04 கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய 333 கற்கைநெறிக் கையேடுகளைப் பதிவுசெய்யும் சந்தர்ப்பத்திற்கு முன்னர் பிரதேச கல்வி நிலையங்களுக்கு வழங்கப்படாமையின் காரணமாக மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்க முடியாதிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) நிதியத்தின் பயன்பாடு**

---

(i) ரூபா 137,369,462 கூட்டுமொத்தமான 178 விசேட மற்றும் ஏனைய நிதியங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் இதில் 68 நிதியங்கள் தொடர்பாக ஆண்டிற்குள் எதுவித கொடுக்கல்வாங்கல்களும் இடம்பெறாமையால் அக்கணக்குகளிலுள்ள ரூபா 20,228,940 தொகை ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கணக்குகளில் தேங்கிக் காணப்பட்டது.

(ii) 03 நிதியங்களுக்காக ரூபா 168,003 கூட்டுமொத்தமான வரவு மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கற்கை நெறிப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் பிரிவின் மூலம் அகற்றப்பட்ட கற்கைநெறிப் பொருட்கள் தேசிய கடதாசிக் கம்பனிக்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் பணப்பெறுவனவுகள் மாத்திரம் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் பெறவேண்டிய வருமானத்தினை இனங்காணக்கூடிய வகையில் புத்தகங்கள், ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகத்தின் நூல் நிலையத்தில் தகவல் தொழில்நுட்ப முறைமையினை அபிவிருத்தி செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து 2004 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,500,000 தொகையில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1,963,089 தொகை அதாவது 26.17% மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கம்பஹா, கேகாலை, குருணாகல் ஆகிய கல்வி நிலையங்களிலுள்ள நூல் நிலையங்களைப் பரீட்சித்த போது அந்த நூல் நிலையங்களின் நிருவாகத்திற்காக பயிற்சி ஊழியர்களை ஈடுபடுத்தாமையும் பிரதான நூல் நிலையத்தினால் அந் நூல்நிலையங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்யப்படாமையும் புத்தகங்கள் வெளியில் எடுத்துச் செல்லும் வசதிகள் வழங்கப்படாமையும் ஒலி, ஒளி, இருவட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தும் கணனி வசதிகள் இல்லாமையும் காரணமாக மாணவர்களின் நூல்நிலைய பயன்பாடு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்தமையும் கேகாலை கல்வி நிலையத்தினை எந்த மாணவர்களும் பயன்படுத்தியிருக்கவில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 158,820 தொகையான 12 வகையான பொருட்களும் 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,920,000 தொகையான ‘‘ஹொட்மேல்ட்’’ வகையான 1500 கிலோகிராம் பிசின்களும் அசைவற்றுக் காணப்பட்டன.

## 3.4 பதவியணியினர் நிர்வாகம்

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினரின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| கல்விப் பதவியணியினர் | 325 | 280 | 45 |
| கல்விசார் உதவிப் பதவியணியினர் | 188 | 156 | 32 |
| நிர்வாகப் பதவியணியினர் | 87 | 47 | 40 |
| கல்விசாரா பதவியணியினர் | 653 | 529 | 124 |
| | 1253 | 1012 | 241 |

இதற்கிணங்க பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1253 ஆக இருந்ததுடன் இதில் 241 பதவியணியினரால் 19% மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்டது. இதற்குமத்தியில் கல்விப் பதவியணியினரில் 19% கல்விசார் உதவிப் பதவியணியினரில் 13% நிர்வாகப் பதவியணியினரில் 17% கல்விசாரா பதவியணியினரில் 51% ஆக துறைரீதியாக அதிகளவான வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குள் உள்ளடக்கப்படாத ‘‘காணி மற்றும் கட்டிட ஆலோசர்’’ என்ற பதவிக்காக தற்காலிக உத்தியோகத்தர் ஒருவர் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக (06 மாதங்கள் படியாக) நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக முறையான ஆய்வுகளின்றி 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 310,270 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பு நல்லாட்சியும்

## 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென 234 செயற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 74 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 46 செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் போதியளவில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 11 செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தாமதிக்கப்பட்டிருந்தன.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் திறந்த பல்கலைக்கழகத்திற்குரிய 09 விடயங்களின் கீழ் 21 துறைகளுக்காகத் திட்டமிடப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போதியளவு உள்ளகக் கணக்காய்வினை அமுல்படுத்துவதற்குத் தேவையான பதவிகளின் எண்ணிக்கையை அங்கீகரித்தல் மற்றும் சேர்த்துக்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கொள்வனவுத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட தகவல்களுக்கும் உள்ளபடியான வருமானச் செலவுகளுக்குமிடையேயான பின்வரும் முரண்களை கவனத்தில் கொள்ளும் போது பல்கலைக்கழகத்தின் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(i) 2011 ஆம் ஆண்டிற்கான 06 வருமான மூலங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 35% இலிருந்து 368% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டிற்காக உழைக்கப்பட்டிருந்த உள்ளக வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமான அளவினை 75% ஆல் மிகைத்திருந்தது. 2010 ஆம் ஆண்டில் 51% ஆலும் 2009 ஆம் ஆண்டில் 27% ஆலும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை மிகைத்திருந்ததுடன் உள்ளக வருமானம் குறைத்து மதிப்பீடு செய்யும் போக்கு அவதானிக்கப்பட்டது.

(ii) 2011 ஆம் ஆண்டில் 39 செலவு விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையேயான முரண்கள் 31% இலிருந்து 983% வரை காணப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) சுற்றுலா விடுதியின் நிர்வாகம்

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) வருகை மற்றும் விடுமுறைப் பதிவேடுகளைப் பேணல்

(உ) காசு மற்றும் வங்கி